டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 17.9.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 076 - Madurai | Online Edition

# கடல்சார் வணிகத்தின் முக்கிய மையமாக தமிழ்நாடு மாறியுள்ளது

## பிரதமர் நரேந்திர மோடி தகவல்

புதுதில்லி, செப்.16

தூத்துக்குடி சர்வதேச சரக்குப் பெட்டக முனையத் திறப்பு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக நேற்று உரையாற்றினார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், வளர்ந்த நாடாக மாறுவதை நோக்கிய இந்தியாவின் பயணத்தில், இன்று ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிக்கிறது என்பதை அடிக் கோடிட்டுக் காட்டினார். மேலும் புதிய தூத்துக்குடி சர்வதேச சரக்குப் பெட்டக முனையம், 'இந்தியாவின் கடல் உள்கட்டமைப்பின் புதிய நட்சத்திரம்' என்று பாராட்டினார். வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தின் திறனை விரிவுபடுத்துவதில் இந்தியாவின் பங்கை எடுத்துரைத்த பிரதமர், '14 மீட்டருக்கும் அதிகமான ஆழமான கச்சா எண்ணெய் தளம் மற்றும் 300 மீட்டருக்கும் அதிகமான நீளம் கொண்ட இந்த முனையம், வ.உ.சி. துறைமுகத்தின் திறனை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும்' என்றார். புதிய முனையம், துறைமுகத்தில் தளவாட செலவுகளைக் குறைப்பதுடன், இந்தியாவுக்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் கூறினார். தமிழ்நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தாம் மேற்கொண்ட பயணத்தின் போது வ.உ.சி. துறைமுகம் தொடர்பாக தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்களை பிரதமர் நினைவு கூர்ந்தார். இந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டதில் அவர் திருப்தி தெரிவித்தார்.



முனையத்தின் முக்கிய சாதனைகளில் ஒன்று, பாலின பன்முகத் தன்மைக்கான அதன் அர்ப்பணிப்பாகும், அதன் ஊழியர்களில் 40% பெண்கள், இது கடல்சார் துறையில் பெண்கள் தலைமை யிலான வளர்ச்சியைக் குறிக்கிறது என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல் வதில் தமிழ்நாட்டின் கடலோர பகுதிகள் முக்கிய பங்காற்றியுள்ளதை ஒப்புக் கொண்ட மோடி, 'மூன்று பெரிய துறைமுகங்கள் மற்றும் பதினேழு சிறு துறைமுகங்களுடன், தமிழ்நாடு கடல்சார் வர்த்த கத்தின் முக்கிய மையமாக மாறியுள்ளது' என்று குறிப்பிட்டார். துறைமுகம் சார்ந்த வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்க, வெளி துறை முக சரக்குப் பெட்டக முனையத்தை உருவாக்க, இந்தியா ரூ.7,000 கோடிக்கு மேல் முதலீடு செய்வதாகவும், வ.உ.சி துறைமுகத்தின் திறன் தொடர்ந்து வளர்ந்து வருகிறது என்றும் கூறினார். 'இந்தியா வின் கடல்சார் வளர்ச்சியில் புதிய அத்தியாயத்தை எழுத வ.உ.சி துறைமுகம் தயாராக உள்ளது' என்று மோடி உறுதிபடக் கூறினார்.

உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு அப்பாற்பட்ட இந்தியாவின் பரந்த கடல்சார் இயக்கம் குறித்து மோடி பேசினார். 'நிலையான மற்றும் முன்னோக்கு சிந்தனை வளர்ச்சிக்கான பாதையை இந்தியா உலகுக்குக் காட்டுகிறது,' என்றும், வ.உ.சி துறைமுகம் ஒரு பசுமை ஹைட்ரஜன் மையமாகவும், கடல் காற்றாலை மின்சக்திக்கான நோடல் துறைமுகமாகவும் அங்கீகரிக்கப்படுவதை சுட்டிக்காட்டினார். பருவநிலை மாற்றத்தின் உலகளாவிய சவால்களை சமாளிப்பதில் இந்த முன்முயற்சிகள் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கும்.

'புதிய கண்டுபிடிப்புகளும், ஒத்துழைப்பும் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் மிகப்பெரிய பலம்' என்று குறிப்பிட்ட பிரதமர், இந்த முனையத் திறப்பு, கூட்டு வலிமைக்கு ஒரு சான்றாகும் என்று குறிப்பிட்டார். சாலைகள், நெடுஞ்சாலைகள், நீர்வழிகள் மற்றும் வான்வழிகள் ஆகியவற்றின் பரந்த வலைப்பின்னலுடன், இந்தியா தற்போது நன்கு இணைக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக் காட்டிய மோடி, இது உலகளாவிய வர்த்தகத்தில் நாட்டின் நிலையை வலுப்படுத்துகிறது என்றார். 'உலகளாவிய விநியோகச் சங்கிலியில் இந்தியா ஒரு முக்கியப் பங்குதாரராக மாறி வருகிறது, இந்த வளர்ந்து வரும் திறன், நமது பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகும்' என்று பிரதமர் குறிப்பிட்டார். இந்த உத்வேகம் விரைவில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை மாற்றும் என்றும், இந்த வளர்ச்சியை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு முக்கியப் பங்கு வகிக்கிறது என்றும் நம்பிக்கை தெரிவித்து மோடி தமது உரையை நிறைவு செய்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## மலர் மற்றும் அலங்கார பயிர்களுக்கான நாற்றாங்கால் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், செப்.16

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மலர் மற்றும் அலங்கார பயிர்களுக்கான நாற்றாங்கால் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி 19.9.24 காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும். இதில் பொதுமக்கள், அறிவியல் மாணவர்கள், புதிய தொழில் முனைவோர்கள் மற்றும் மகளிர் கலந்து கொண்டு பயன்பெறலாம். இந்த பயிற்சியின் முக்கிய நோக்கமாக, மலர் மற்றும் அலங்கார பயிர் களின் நாற்றங்கால் குறித்த தொழில் நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சியானது கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், மலரியல் துறையில் நடைபெறும். பயிற்சி கட்டணம் : ரூ.1000/- (மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கப்படும்). பதிவு செய்வதற்கு கடைசி நாள் 18.9.24 புதன்கிழமை (மாலை 5.00 மணி வரை).

தொடர்புக்கு : முனைவர் சு.காரத்திகேயன் (99654 35081), முனைவர் சீ.ப.தாமரைச்செல்வி (98433 38666), மலரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம் புத்தூர் - 641 003.

# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில்

## வேளாண்மையில் ஆற்றல் திறன் மேம்பாடு குறித்த நிலையப் பயிற்சி

திருச்சி, செப்.16

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, வேளாண்மையில் ஆற்றல் திறன் மேம்பாடு மற்றும்மேலாண்மை பற்றிய ஒரு நாள் நிலையப் பயிற்சி 18.9.24 அன்று சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ளது. 17.9.24 அன்று நடைபெற இருந்த இப்பயிற்சியானது 18.9.24 (புதன்கிழமை) அன்று மாற்றப்பட்டுள்ளது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் முன்பதிவு செய்து கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பங்கு பெற விரும்பும் விவசாயிகள் 98655 42358, 91717 17832, 0431 2962854 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவிக்கிறார்.



# மக்காச்சோளத்தில் படைப்புகள் கட்டுப்படுத்துவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



மதுரை, செப்.16

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், ப.அம்மாபட்டி ஊராட்சியில் திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இளநிலை வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் சீ. மோனிகா, கொ.மோ.பிரேமலதா, பி.கீர்த்தனா, ஜோ.அமல யோஷ்னி மற்றும் ஆ.இந்துமதி ஆகியோர் ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் கீழ் அவ்வூரில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்கள் மக்காச்சோளத்தில் படைப்புகள் கட்டுப் படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

**மேலாண்மை**

- வேப்பம் பிண்ணாக்கு 250 கிலோ/ஹெக்டரை கடைசி உழவின் போது இடவும்.

- சயன்ட்ரானிலிப்ரோல் 19.8% + தியாமெதாக்சம் 19.8% FS @ 4 மில்லி/கிலோ விதையுடன் விதை நேர்த்தி.

- கவ்வி, இஞ்சி, செம்பருத்தி அல்லது சூரியகாந்தி (தோட்ட நிலம்) மற்றும் தீவனச் சோளம் (உலர்ந்த நிலம்) @ 3 வரிசைகளைக் கொண்ட எல்லைப் பயிர். படைப்புழு பெரோமோன் பொறிகளை @ 12 எண்கள்/எக்டருக்கு அமைக்கவும்.

- அஸாடிராக்டின் 1500 பிபிஎம் @ 2.5 லிட்டர்/எக்டர் அல்லது குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5 எஸ்சி @ 200 மிலி/எக்டர் (அல்லது) ஃப்ளூபெண்டியாமைடு 480 எஸ்சி@ 250 மிலி/எக்டரை ஆரம்ப நிலையில் (15 – 20 டிஏஇ) தெளிக்கவும்.

- Metarhizium anisopliae @ 2.5 kg/ha அல்லது Emamectin benzoate 5 SG @ 200g/ha அல்லது Novaluron 10 EC @ 750 ml/ha அல்லது spinetoram 11.7 SC @ 250 ml/ha (35 whor-l/ha நிலை தாமதமாக) 40 DAE.

- தாமதமான சுழல் நிலைகளில் பரிந்துரைக்கப்படும் பூச்சிக் கொல்லிகளில் ஒன்றை தேவைப்பட்டால், கோப் உருவாகும் கட்டத்தில் பயன்படுத்தலாம். ஆனால் மீண்டும் மீண்டும் செய் வதைத் தவிர்க்க வேண்டும்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 16.09.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 35 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 55 | 57A | உருளை(ஊட்டி) | 58 | 62 |
| 2 | வெண்டை | 25 | 30 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 20 | 24 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 36 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 15 | 18 | 60 | கேரட் | 80 | 84 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 42 | 46 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 58 | 62 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 30 | 35 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 25 | 30 | 66 | காளிபிளவர் | 50 | 58 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 170 | 175 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 36 | 69 | இஞ்சி | 60 | 136 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 36 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 40 | 44 | 71 | பென்னி பீன்ஸ் | 55 | 60 |
| 16 | பெ.வெங்காயம் | 50 | 56 | 72 | குடமிளகாய் | 48 | 52 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 32 | 36 | 73 | ஊட்டி அவரை | 110 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 54 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 |
| 19 | முருங்கை | 30 | 34 | 71A | | | |
| 20 | தேங்காய் | 35 | 38 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 65 | 70 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 130 | 140 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 75 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 35 | 38 |
| 28 | கறிவேப்பிலை | 25 | 30 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 110 | 115 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 30 | 34 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 15 | 20 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 36 | 96 | நேந்திரன் | 40 | 45 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 30 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 36 | | | | |

# பெருந்துறை வட்டாரத்தில் நிலக்கடலை குறித்த பண்ணை பள்ளி விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, செப்.16

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2024-2025 ஆம் ஆண்டுக்கான நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பண்ணை பள்ளி வகுப்பு பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் க.பிரசாத், தலைமை தாங்கி கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் வேளாண் கிடங்கில் இருப்பில் உள்ள உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டம் பெற விரும்பும் விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பற்றி சிறப்புரையாற்றினார்.

மேலும் ஜே.ஜே.எம். உதவி பேராசிரியர், முனைவர் சு.போஜராஜ் கலந்து கொண்டு பேசுகையில் மண் மற்றும் நீர் மாதிரி சேகரிக்கும் முறை பற்றிய செயல் விளக்கமும் அவற்றை பயன்படுத்தும் முறை பற்றியும் மேலும் நிலக்கடலை விதையை விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் விசுவநாதன் மற்றும் தாமோதரன் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் உழவன் செயலி பதிவிறக்கம் செய்தல் மற்றும் அவற்றை பயன்படுத்தும் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மாநில அளவிலான விவசாயிகள் பயிற்சி




புதுக்கோட்டை, செப்.16

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான விவசாயிகள் பயிற்சி தலைப்பு நெற் பயிரில் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு முறையில் சாகுபடி செய்தல் பற்றி தெரிந்து கொள்வதற்காக கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலை கழகத்திற்கு விவசாயிகளை பயிற்சிக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

இப்பயிற்சியில் புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில், மணமேல்குடி, அறந்தாங்கி, அரிமளத்தை சேர்ந்த 40 விவசாயிகளை கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சிக்கு விவசாயிகளை ஆவுடையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர் சவீதா வழி அனுப்பி வைத்தனர். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் முனைவர் மனோன்மணி பேராசிரியர் மற்றும் தலைவர், இந்த ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்ட நெல் ரகங்கள் இவற்றின் குணாதியசங்கள், வறட்சி, பூச்சி, நோய்களை எதிர்க்ககூடிய ரகங்களை விவசாயிகள் பார்வைக்கு வைக்கப்பட்டு விரிவுரை வழங்கினார். முனைவர் செந்தில்குமார், உழவியல்துறை பேராசிரியர், ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் பகுப்பாய்வு முறையில் நெற்பயிர் மேலாண்மை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

முனைவர் ஷீலா, பூச்சியியல் துறை, நெற்பயிரை தாக்கும் பூச்சிகள், நோய்கள், அறிகுறிகள் பற்றியும் வயல்வெளி ஆய்வின் மூலம் நேரடியாக காண்பித்தார். முனைவர் உமாதேவி, புதிதாக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வரும் நெல் ரகங்கள் விவசாயிகளுக்கு வயல்வெளி மூலம் விரிவரை வழங்கினார். பயிற்சியின் இறுதியாக விவசாயிகளுக்கு புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட நெல் ரகங்கள் விவசாயிகளின் வயல்களில் ஆய்வு செய்யுமாறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சியை ஒருங்கிணைந்து ஆவுடையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜகுபர்அலி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ராமநாதன், கீர்த்திகா ஆகியோர்கள் அழைத்து சென்று வந்தனர்.

# இப்கோ நானோ உரங்கள் மாதிரி கிராமத் திட்டம் – ஓர் பார்வை

நானோ உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் இப்கோ நானோ உரங்கள் மாதிரி கிராமத்திட்டத்தை தொடங்கி உள்ளது. இத்திட்டத்தை இப்கோ மேலாண்மை இயக்குநர் டாக்டர் U.S.அவஸ்தி, விற்பனை இயக்குநர் திரு.யோகேந்திர குமார் அவர்களால் ஜூலை 01, 2024 அன்று காணொளி மூலம் நாடு முழுவதும் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் மாதிரி கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு நானோ யூரியா, நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்கள் 25% மானிய விலையில் வழங்கப்படும். மேலும், நானோ உரங்களை இப்கோ ட்ரோன் மூலம் தெளிப்பதற்கு ஒரு ஏக்கருக்கு ரூ.300 மட்டுமே. நானோ உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக் கொல்லி மருந்துகளும் கலந்து தெளிக்கலாம்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 10 மாவட்டங்களில் சுமார் 20,000 ஏக்கர் பரப்பளவு வரை நானோ உரங்களை விவசாயிகள் மானிய விலையில் தெளித்து பயன் பெறலாம். தமிழகத்தில் திருவள்ளூர், திருவண்ணாமலை, இராணிப் பேட்டை, ஈரோடு, தர்மபுரி, கோவை, கள்ளக்குறிச்சி, சேலம், தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் இப்கோ நானோ உரங்கள் மாதிரி கிராம திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

- ADVT.



# இயற்கை வழி வேளாண்மை நிகழ்ச்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



திண்டுக்கல், செப்.16

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ் சுருளிப்பபட்டியில் தங்கி, விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்ப பயிற்சிகளை அளித்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, 'இயற்கை வழி வேளாண்மை நிகழ்ச்சி' சுருளிப்பட்டி ஒக்கலிக்கர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இயற்கை வேளாண்மை குறித்த முக்கிய சிந்தனைகள் விவாதிக்கப்பட்டன. மண் வாழ்வியல், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, தேனீ வளர்ப்பு, தாளாண்மை பண்ணையம் போன்ற தலைப்புகள் குறித்து விரிவான செயல் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மேலும், இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகவே, ஒரு சிறிய வேளாண் கண்காட்சியும் நடத்தப்பட்டது. இதில், இயற்கை உரங்கள், பூச்சி மேலாண்மை கருவிகள், தேனீ வளர்ப்பு உபகரணங்கள், மற்றும் தாளாண்மை பண்ணையம் தொடர்பான தகவல்கள், சுருளிப்பட்டி பங்கேற்பு கிராம திறனாய்வு கருவிகள் ஆகியவை காட்சிப்படுத்தினர்.

விவசாயிகளும் இதில் பெரிதும் பயனடைந்ததுடன், தங்களின் பண்ணை முறைகளை மேம்படுத்த இயற்கை வேளாண்மை நடைமுறைகளை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தேனி மாவட்டம், கம்பம், வேளாண் அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் துணை வேளாண்மை அலுவலர் கலந்து கொண்டு, இயற்கை வேளாண்மை முறைகள் குறித்த தங்களின் மதிப்புமிகு கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கால்நடை கணக்கெடுப்பு ஏன்? எப்போது தொடக்கம்?



கால்நடைகள் இந்தியா நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய காரணியாக உள்ளது. உலகளவில் 11.5% கால்நடை இந்தியாவில் உள்ளன. அதனால் தான் என்னவோ பால் உற்பத்தியில் முதல் இடத்திலும், முட்டை உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும், இறைச்சி உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும் இந்தியா உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**கால்நடை கணக்கெடுப்பு நடத்துவது ஏன்? எதற்காக?**

கால்நடைத்துறையில் எந்தவொரு திட்டத்தையும் முறையாக செயல்படுத்தவும் உருவாக்கிடவும் அவசியம் தேவையான ஒன்றாக கால்நடை கணக்கெடுப்பு உள்ளது.1919-20யில் முதல்முறையாக கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, பின் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு கடந்த 2019யில் கடைசியாக 20வது கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 1919யில் தொடங்கப்பட்ட கால்நடை கணக்கெடுப்பு 22 மாநிலங்களில் உள்ள கால்நடை வளர்ப்போர் குறித்த அதிகாரப்பூர்வமாக கணக்கெடுப்பாக இல்லை என குற்றச்சாட்டாக உள்ளது.

கால்நடை கணக்கெடுப்பில், எருமை, செம்மறி ஆடு, பன்றி, குதிரை, கழுதை, ஓட்டகம், நாய், முயல் போன்றவை குறித்த சரியான தகவல் இல்லை. அந்த வகையில் புதிதாக கணக்கெடுப்பு வருகிற செப் 20ஆம் தேதி தொடங்கி டிசம்பர் 24யில் முடியும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இது 21வது கால்நடை கணக்கெடுப்பாகும் (LIVESTOCK CENSUS).

**கணக்கெடுப்பு எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது?**

கால்நடை கணக்கெடுப்பை, மேற்கொள்வதற்காக கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை அமைச்சகம், பல்வேறு மாநிலங்களில் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 35 சிவில் சமூக அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) போடப்பட்டு, கணக்கெடுப்பு பணி தொடங்க போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தோராயமாக எவ்வளவு கால்நடைகள் வளர்ப்போர்கள் உள்ளனர்? தெரியுமா? இந்தியாவில் 22 மாநிலங்களில், 13 மில்லியன் கால்நடை வளர்ப்போர் உள்ளதாக தரவுகள் கூறுகின்றன. நாட்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தியில், அவர்களின் பங்களிப்பு சுமார் 3% யாகும். குறிப்பாக உற்பத்தி 5.5% அதிகரித்துள்ளன.

**கணக்கெடுப்பால் என்ன பயன்?**

கணக்கெடுப்பால் மத்திய பட்ஜெட்டில் கொள்கை உருவாக்க திட்டம், கால்நடை வளர்ப்புக்குத் தேவையானவற்றை திட்டத்தில் இடம் பெற வாய்ப்பு உருவாக்கிட இக்கணக்கெடுப்பு உதவுகிறது. தற்போது நவீன செயலி மூலமாக கணக்கெடுப்பு நடப்பதால் 28 கோடிக்கு அதிகமான இடங்களில் உள்ள கால்நடைகளை துல்லியமாக கணக்கெடுக்க முடியும் என எதிர்பார்க்கபடுகிறது.

கால்நடை கணக்கெடுப்பின் போது சரியான தகவல் கூறுவதுடன் கால்நடைகளை அதிகரிக்க உதவுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# பருத்தியில் ஊடுபயிர் சாகுபடி

நம் நாட்டின் பருத்தியின் தேவையை ஈடுகட்டவும், பெருகிவரும் சாகுபடிச் செலவு போன்ற இடர்பாடுகளைச் சமாளிக்கவும், பருத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கான பல்வேறு தொழில்நுட்பங்களில் ஊடுபயிர் சாகுபடி முறையும் முக்கியமானதாகும்.

இது குறித்து சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா கூறியதாவது,

- இது நன்மைத் தரக்கூடியதாகவும், அதிக வருமானம் தரும் தொழில்நுட்பமாகவும் கருதப்படுகிறது.
- மேலும் பயிர்த் திட்ட அதிகரிக்கவும், இடுபொருட்கள் மற்றும் வளங்களை திறமையாகப் பயன்படுத்தவும் இதுவே மிகச்சிறந்த வழியாகத் திகழ்கிறது.
- பருத்தியில் ஊடுபயிர் சாகுபடியின் முக்கிய நோக்கம் ஊடுபயிர்களின் மூலம் கூடுதல் விளைச்சலும், அதன் மூலம் வருமானத்தை உயர்த்துவதுமே ஆகும்.

**பருத்தியில் ஊடுபயிர் சாகுபடி செய்வதால் ஏற்படும் நன்மைகள்**

- நீர் மற்றும் நிலவளங்கள் நன்குபயன்படுத்தப்படுகின்றன
- வேளாண் இடுபொருட்களை திறம்பட பயன்படுத்த வழி கோலுகின்றது
- பருத்தியில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்கள் குறையும்
- ஊடுபயிர்கள் பருத்தியின் இடைப்பட்ட பகுதிகளை அடைத்து மண்ணை மூடி விடுவதால், களைகள் வளர்வது கட்டுப்படுத்தப்படுகின்றது.
- உளுந்து மற்றும்பாசிப்பயறு போன்ற பயறுவகைப் பயிர்களும், சணப்பு மற்றும் தக்கைப்பூண்டு போன்ற பசுந்தாள் பயிர்களும் பருத்தியில் ஊடுபயிராக சாகுபடி செய்வதால் மண் வளம் பெருகுகின்றது.
- ஊடுபயிர்களிலிருந்து கூடுதல் விளைச்சல் கிடைக்கின்றது.
- மொத்த விளைச்சல் மற்றும் நிகர லாபம் அதிகரிக்கின்றது.

● ஊடுபயிர்களிலிருந்து கிடைக்கும் வருமானம் தொடர்ந்து பருத்தியின் சாகுபடி செலவுகளைசரிக்கட்ட அவ்வப்போது பயன்படுகின்றது.

● மானாவாரி சாகுபடியில் மழை குறைவு அல்லது காலநிலை மாறுபாட்டால் பருத்தி விளைச்சல் குறைந்தால், ஊடுபயிர்கள் வளர்ந்து விளைச்சல் அளித்து நஷ்டத்தை குறைகின்றது.

**கவனிக்க வேண்டியவை**

● பருத்தியும் ஊடுபயிரும் ஒன்றுக்கொன்று உதவும் வகையில் (பூச்சி நோய்க் கட்டுப்பாடு), மண்வளப் பாதுகாப்பு, களைக் கட்டுப்பாடு) அமைய வேண்டும்.

● ஊடுபயிர்கள் குறைந்த வயதுடையதாக இருப்பது நல்லது.

● ஊடுபயிர்கள் பருத்தியின் உயரத்தைவிடக் குறைவாக இருக்க வேண்டும்.

● பருத்திப் பயிர் மால்வேசிக் குடும்பத்தை சேர்ந்திருப்பதால் அதே குடும்பப் பயிர்களை தவிர்ப்பது நல்லது. வெண்டை பயிர் சாகுபடி செய்தால், பூச்சிகள் பாதித்த பிறகு வெண்டையை சுமார் 60-70 நாட்களில் அப்புறப்படுத்தி விட வேண்டும்.

● ஊடுபயிர்கள் பருத்தியின் வளர்ச்சியுடன் போட்டியிட்டு வளரும் தன்மையுடையதாக இருக்கக் கூடாது (மக்காச்சோளம் சோளம். சூரியகாந்தி போன்ற பயிர்களைத் தவிர்த்துவிட வேண்டும்).

● ஊடுபயிர்கள் பருத்தியைத் தாக்கும் பூச்சிகளால் விரும்பப் படாதவைகளாக இருக்க வேண்டும் (கத்தரி, தக்காளி, வெண்டை மற்றும் துவரை போன்றவை பூச்சிகனால் விரும்பப்படுவதால் இவற்றைத் தவிர்ப்பது நல்லது).

● ஊடுபயிருக்கென்று கூடுதலாக உரமோ, பூச்சிக்கொல்லி மருந்தோ தெளிக்கத் தேவையில்லை.

**பருத்தியில் ஊடுபயிர் சாகுபடிக்கு உகந்த பயிர்கள்**

**பயறு வகைகள்**

உளுந்து, பாசிப்பயறு, தட்டைபயறு

**காய்கறிப் பயிர்கள்**

சின்ன வெங்காயம், கொத்தவரை, முள்ளங்கி, கொத்தமல்லி, பீட்ரூட், தண்டுக்கீரை போன்ற பயிர்களை சாகுபடி செய்யலாம்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# குதிரை வாலி விதை வழங்கும் விழா



விருதுநகர், செப்.16

விருதுநகர் மாவட்டம், காரியபட்டி வட்டாரத்திலுள்ள கல்யாணிபுரம் கிராமத்தில் 12.9.24 அன்று கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் மையமும் (KVK) யும் ரிலையன்ஸ் பவுண்டேஷனும் இணைந்து, விவசாயிகளுக்கு சிறுதானிய சாகுபடியை ஊக்குவிக்க, இலவசமாக குதிரைவாலி விதை வழங்க பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட ரீலையன்ஸ் திட்ட மேலாளர் ஸ்ரீ கிருபா தலைமை வகித்து பேசுகையில், விவசாயி களின் நலனுக் காகவும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட நாங்கள் அரசுத்துறை நிறுவனங்களுடன் இணைந்து இது மாதிரியான சேவைகளை செய்து வருகிறோம். இதுமட்டுமல்லாது நெல், மக்காசோளம் மற்றும் நிலக்கடலை பயிருக்கான டிஜிட்டல் பண்ணை பள்ளிகளை நடத்தி வருகிறோம். விவசாயிகளுக்கு தேவையான விதை முதல் விற்பனை வரையிலான அனைத்து தகவல் தொழில்நுட்பங்களை வாய்ஸ் மெசேசிஸ், வாட்சாப் மற்றும் ஆன்லைன் கான்பரன்ஸ் மூல மாகவும், நேரிடையாகவும் கள பணியாற்றி வருகிறோம் என்றார்.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

இந்த நிகழ்வில் கே.வி.கே உதவி பேராசிரியர்கள் வேணுதேவன், ஷிபா, கலந்து கொண்டு குதிரைவாலி – மதுரை 1 ரக விதையை இலவசமாக வழங்கினார்கள். பின் இப்புரட்டாசி பட்டத்தில் குதிரை வாலி விதைப்பிற்கான தொழில்நுட்ப கருத்துகளை எடுத்துக் கூறினர். மேலும், மற்ற சிறுதானியங்களை விட இதில் 'க்ளுட்டன் என்ற புரத பொருள் இல்லாத காரணத்தால், க்ளுட்டன் அலர்ஜி உள்ளவர் களுக்கு அற்புதமான மாற்று தானியமாகவும் உள்ளது. வறட்சியை தாங்கி வளர்வதுடன் பூச்சி/நோய் தாக்குதல் குறைவு. மேலும் விதைகளை விதைத்து விட்டு, பயிர் எண்ணிக்கை சரி செய்ய, நாற்றுகளை மழை நேரங்களில் பிடுங்கி நடலாம், தொழ உரம் மற்றும் கிடை அமர்த்தி மானா வாரியாக விதைக்கலாம்.

நிலத்தில் ஈரமிருக்கும் போது அடியுரமாக ஏக்கருக்கு 55 கிலோ சூப்பர் பாஸ்பேட் + 20 கிலோ யூரியா இடலாம். அவசியம் 5 கிலோ

நுண்ணூட்ட சத்து (M.N MIXTURE FOR MILLAT) இட வேண்டும் என்றனர்.

இந்நிகழ்வில் வேளாண் வல்லுநர் சந்திரசேகரன் கலந்து கொண்டு ரிலையன்ஸ் பவுண்டேஷனால் இலவசமாக ஆய்வு செய்த மண்வள அட்டைகளை, விவசாயிகளுக்கு வழங்கினர். இந்நிகழ்வில் முன்னோடி விவசாயி மங்களநாதன் மற்றும் கண்ணன், கருப்பையா, குமார், பரதன் உள்பட ஏராள மானவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் ரிலையன்ஸ் கள பணியாளர் வேம்புலு சிறப்பாக செய்திருந்தார். குதிரைவாலிக்கு டி.விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்வது குறித்த செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.



# அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கருத்தரங்கு மற்றும் கண்காட்சி



சிவகங்கை, செப்.16

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாரம் வேளாண்மைத் துறையின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் 2024-2025-ம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் தேர்ந் தெடுக்கப்பட்ட கோட்டையூர் கிராமத்தில் 12.9.24 அன்று விவசாயி களுக்கு கிசான் கோஷ்தீஸ் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இளையான்குடி வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன் தலைமையேற்று பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு முதல் அமைச்சரின் மன்னுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் நுண்ணீர் பாசன திட்டம் மற்றும் பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டங்கள் மேலும் வேளாண்மைத்துறையின் மூலமாக செயல்படுத்தி வரும் மத்திய மற்றும் மாநில திட்டங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி, முனைவர் விமலேந்திரன் (உழவியல் துறை) விவசாயிகளுக்கு இயற்கை விவசாயத்தின் பண்புகள் இயற்கை உரங்கள் மற்றும் பயிர் வளர்ச்சி ஊக்கிகளை பயன்படுத்துதல் குறித்து எடுத்துக் கூறினார். மேலும் இயற்கை உரங்களான மண்புழு உரம், சாண எரு உரம், தொழு உரம், பசுந்தாள் உரம் மற்றும் பசுந்தழை உரம் ஆகியவற்றை பயன்படுத்தலாம். பயிர்கள் நன்கு செழித்து வளர அதிக இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கி களான குணப்பசலம், தேங் காய் பால்மோர், அமிர்தகரைசல், பஞ்சகவ்யா ஆகியவை பயன் படுத்த வேண்டும் என்று விரிவான முறையில் விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார். வேளாண்மை அலுவலர் அழகர்ராஜா இயற்கை முறையில் பூச்சி விரட்டி 3G கரைசல் மற்றும் மீன் அமிலம் போன்ற இயற்கை வழி தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை பொறியியல் துறை, விதை சான்றளிப்பு துறை, வேளாண் வணிகத்துறை மற்றும் கால்நடை துறை அலுவலர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியில் அந்தந்த துறைகள் வாரியாக செயல்படுத்தி வரும் திட்டங்கள் மற்றும் மானி யங்கள் மற்றும் கருத்துக் காட்சிகள் மூலமாக எடுத்துரைத்தனர்.

துணை வேளாண்மை அலுவலர் நடேசகுமார் விவசாயி களுக்கு கருத்தரங்கு நிகழ்ச்சியில் மண் வள அட்டையை பயன்படுத்தி உரமிடுதல் மற்றும் வேளாண்மைத் துறையில் புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள திட்டமான விவசாயிகள் இடுபொருட்கள் பெறுவதற்கு பணமில்லா பரிவர்த்தனை (ATM Card/G-Pay-Phone pay) பற்றி விரிவான முறையில் எடுத்துக் கூறினார். மேலும் உதவி வேளாண் அலுவலர் சோபானா, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தரிசு நில மேம்பாடு திட்டம் மற்றும் மரக்கன்றுகள் நடவு செய்தல் குறித்து எடுத்துரைத்தார். மேலும் மின்னனு பரிவர்த்தனை மூலம் விவசாயி களுக்கு இடுபொருள்கள் வழங்கப்படுகிறது என விவசாயிகளுக்கு கூறப்பட்டது.

இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கி.கோகிலா ஒவ்வொரு பயிர் வளர்வதற்கும் அடிநாதமாக இருப்பது விதைகள். எனவே தரமான நாட்டு விதைகளை பயன்படுத்தி நெல் உட்பட பல தானியங்களை விளைவிப்பதே இயற்கை வேளாண்மையின் அடிப்படை ஆகும் என்று விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சதீஸ் மற்றும் சரண்யா ஆகியோர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயிற்சிக்கான ஏற்பாடுகள் செய்தனர்.

# தேங்காயில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் வேர்வழி நுண்ணூட்டம் அழித்தல்



திண்டுக்கல், செப்.16

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டாரத்தை சேர்ந்த கொத்தப் புள்ளி பஞ்சாயத்து கதிரணம்பட்டி கிராமத்தில் காந்திகிராமம் பல்கலைக்கழக வேளாண் மற்றும் கால்நடை அறிவியல் கல்லூரியில் இளநிலை வேளாண்மை பட்டப்படிப்பு பயிலும் மாணவிகள் புவனேஸ்வரி, பவானி, அக்ஷிதா, அபிதா தேவி ஆகியோர் தங்களின் ஊரக வேளாண்மை பணி அனுபவ திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர். இதில் உலக தேங்காய் தினத்தை கொண்டாடும் வகையில் தென்னை மரத்திற்கான ஒருங் கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் வேர்வழி நுண்ணூட்டம் அழிப்பதை அட்மா திட்ட அலுவலர் பொன் தமிழரசு தலைமையில் விவசாயி சேவியர் முன்னிலையில் செய்து காட்டினர். அப்பகுதி தென்னை விவசாயிகள் இதனை தெரிந்து கொண்டு பயனுள்ளதாக இருந்தது என கல்லூரி மாணவிகளுக்கு நன்றியினை தெரிவித்தனர்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# மகசூல் அதிகரிப்பில் முகவரியாக செயல்படும் ஜிங்க் சல்பேட் விவசாயிகள் பயன்படுத்த மதுக்கூர் வேளாண் உதவி இயக்குனர் வேண்டுகோள்



வேளாண் துறை மூலம் வேளாண் விரிவாக்க மையங்களில் மானிய விலைகளில் 10 கிலோ பைகளில் ஜிங்க்சல்பேட வழங்கப்பட்டு குறுவை தொகுப்பு திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகிறது. பயிர் எதுவானாலும் அதன் வளர்ச்சியை அதிகரிப்பதில் ஜிங்க் முக்கிய பங்காற்றுகிறது. முக்கியமாக நெல் வயல்களில் பயிரை சுற்றி மண் மற்றும் நீர் குளிர்ந்த வெப்ப நிலையில் இருக்கும். குறைந்த வெப்பநிலையில் மண்ணில் உள்ள கரிமச்சத்துகளின் செயல்பாடும் குறைகிறது. இதனால் வேரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு நெற்பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும்.

அதிக ஜிங்க் பற்றாக்குறையின் போது நெல் வயலில் பயிரானது சிவந்து சுட்டி சுட்டியாக காணப்படும். இத்தகு இடங்களில் வயலில் தெளிக்கப்படும் சிங் சல் பேட் நெல்பயிரின் வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது. அதிக வேர் அதிக தூர் என்ற வகையில் செயல்பட்டு மகசூல் அதிகரிப்பதில் முகவரியாக செயல்படுகிறது. மணல் சாரியான இடங்களில் மற்றும் குறைந்த அளவு கரிம கார்பன் உள்ள இடங்களில் ஜிங்க்சல்பேட் இடுவதால் மண்ணில் உள்ள பிற சத்துக்களை எடுப்பதிலும் இது பயிர்களுக்கு உதவி செய்து பயிரின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகிறது.

மண்ணில் மணி சத்து அதிகம் உள்ள இடங்களில் பாசிகளின் வளர்ச்சியும் அதிகமாக இருக்கும். இத்தகு வயல்களில் சிங்க் பற்றாக்குறை ஏற்பட்டு வேர் மற்றும் தூர்களின் வளர்ச்சி குறைந்து மகசூல் பாதிக்கப்படும் இந்த இழப்பை குறைப்பதற்கு அவசியம் சிங் சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ இட வேண்டும். சிங் சல்பேட் எளிதாக நீரில் கரையக்கூடிய தன்மையுடையது அனைத்து பயிர்களிலும் இலைகள் விரைந்து பச்சை நிறம் அடைவதை சிங்சல்பேட் உறுதி செய்து அதன் மூலம் மகசூல் அதிகரிக்கிறது. ஜிங்க்சல்பேட் அனைத்து பயிர்களிலும் அதிக பூக்கள் உருவாவதையும் கனிகளாக மாறுவதையும் உறுதி செய்கிறது.

தென்னையில் மட்டைகள் முதிர்ச்சி அடையாமல் கீழே விழுவது தென்னம்பாளையில் பூக்கள் உருவாகி குரும்பை வைப்பதில் தாமதம் இலைகளின் நீளம் குறைவது போன்ற குறைபாடுகளை ஜிங்க் சல்பேட் இடுவதால் சரி செய்யலாம். மதுக்கூர் வட்டாரத்தில் 8.5 டன் ஜிங்க் சல்பேட் இருப்பு வைக்கப் பட்டு 10 கிலோ பைக்கு ரூ.250 வீதம் மானியத்தில் வழங்கப் பட்டு வருகிறது. எனவே அனைத்து விவசாயிகளும் ஜிங்க் சல்பேட் மானியத்தில் பெற்று பயனடைய கேட்டுக் கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அண்ணாதுரை மதுக்கூர் வட்டார விவசாயிகளுக்கு சிங்சல்பட்டினை மானியத்தில் வழங்கினார்.



# பங்கேற்பு கிராம திறனாய்வு நிகழ்ச்சி



திண்டுக்கல், செப்.16

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளநிலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் விஸ்வப்பிரியா, அப்ஸானா சஃப்ரீன், முத்துஸ்ரீஅபிராமி, விசாலினி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் தேனி மாவட்டம் சின்னமனூர் வட்டாரம் மார்க்கையன்கோட்டையில் ஒரு பகுதியாக பங்கேற்பு கிராம திறனாய்வு (PRA - Participatory Rural Appraisal) நிகழ்ச்சியை நடத்தினார். இந்த நிகழ்ச்சியின் மூலம் கிராம மக்கள், மாணவர்கள் மற்றும் சமூகத்தினர் பெரும் பங்களிப்பு செய்தனர். ஊணயூபு என்பது கிராம மக்கள் தங்களின் பிரச்சினைகளை கண்டறிந்து அதை தீர்க்கும் வழிகளை அவர்கள் பங்களிப்புடன் வகுப்பது எனும் முறையை அடிப்படையாகக் கொண்டது.




இந்த PRA நிகழ்ச்சி மூலம் மாணவிகள் நேரடியாக தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகள், எதிர்ப்புகள் மற்றும் தேவைகள் அறிந்து கொண்டனர்.இதன் மூலம் கிராமத்தின் நிலைமைகள் அவசரத் தேவைகள் மற்றும் முன்னேற்றங்கள் பற்றிய முழுமையான புரிதல் கிடைத்தது. இந்நிகழ்ச்சி கிராம மக்களின் உரிய பங்கேற்புடன் முழுமையடையும் தனது.மேலும் வேளாண் மாணவிகள் தங்களுக்கு கிடைத்த அனுபவத்தை அவர்களது கல்வியில் செயல்படுத்துவதற்கான ஒரு வாய்ப் பாகவும் பயன்படுத்தினர். இது கிராமத்தின் வளர்ச்சிக்கு உறு துணையாக இருக்கும் என்றும் எதிர்காலத்தில் இத்தகைய PRA நிகழ்ச்சிகள் கிராம வளர்ச்சிக்கு பெரும் பலன் அடையச் செய்யும் என்றும் அனைவரும் நம்பினர்.

# விவசாய பயிர்களில் இருந்து காட்டுப்பன்றியை இயற்கை முறையில் விரட்டும் பயிற்சி

விருதுநகர், செப்.16

விருதுநகர் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் காட்டுப் பன்றிகள் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் விவசாயிகள் மன உளைச்சலாகி நஷ்டம் அடைந்து வருகின்றனர். தற்போது உள்ள காட்டுபன்றியினால் பயிர் சாகுபடியில் அதிகமான பிரச்சனை இருக்கிற காரணத்தால் இந்த செயல் விளக்கம் குருணை மருந்து மற்றும் திரவ மருந்து மூலமாக கட்டுப்படுத்தும் முறை பற்றி காரியாபட்டி உதவி வேளாண்மை இயக்குனர் கட்டுப்பாட்டில் உள்ள கஞ்ச நாயக்கன்பட்டி கிராமத்தில் கம்பிக்குடி கால்வாய் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் மூலமாக வேளாண் துறையுடன் இணைந்து விவசாய பயிர்களில் இருந்து காட்டுப்பன்றியை இயற்கை முறையில் விரட்டுவது சம்பந்தமாக செயல்முறை விளக்க பயிற்சி நடைபெற்றது.

நெல், வேர்கடலை, சிறுதானியம், கத்தரி உள்ளிட்ட சாகுபடி இடங்களில் காட்டுப் பன்றிகள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. காட்டுப்பன்றிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த முள்வேலி, மின்சார வேலி, வண்ணத்துணிகள் ஆகியவற்றை வயலை சுற்றி கட்டுதல் மற்றும் பல்வேறு ரசாயன மருந்துகள் பயன்படுத்துவதன பல வழிகளில் மேற்கொள்ளும் விவசாயி களின் முயற்சி தோல்வி அடைந்து வந்தது.

இந்த நிலையில் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி அருகே கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் கம்பிக்குடி கால்வாய் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் சார்பில் விவசாயிகள் மத்தியில் காட்டுப்பன்றிகளிடம் இருந்து பயிர்களை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு செயல்முறை விளக்க பயிற்சி நடைபெற்றது. அதில் விரிஞ்சிபுரம் (வேலூர்) தமிழ்நாடு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மூலம் காட்டுப்பன்றியை விரட்ட தயாரிக்கப்பட்ட மருந்தை பயன்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.

இந்த இயற்கை காட்டுப்பன்றி விரட்டி என்ற பெயரில் வழங்கப்படுகின்ற இந்த மருந்தின் வாடை, காட்டு பன்றிகளின் சுவாசத்திற்கு எரிச்சல் உண்டாக்கும் சக்தி கொண்டது.

காட்டுப்பன்றி உயிருக்கு சேதமின்றி, விவசாயத்தை காக்க சோதனைக்கு உட்பட்டு இந்த மருந்து வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வில் முஷ்டக்குறிச்சி மற்றும் கம்பிக்குடி ஊராட்சி தலைவர், வார்டு உறுப்பினர்கள், விவசாய பெருமக்கள், வேளாண் துறை அலுவலர்கள் , கம்பிக்குடி கால்வாய் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் இயக்குனர்கள் மற்றும் அதன் வழிகாட்டு நிறுவனமான எப்.ஆர்.டி.எஸ் (FRDS) இன் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## பருவகால நாட்காட்டி வரைபடம் : விவசாயிகளுக்கு செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



விருதுநகர், செப்.16

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டாரம், தேவதானம் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவ திட்டத்தில் இளங்கலை வேளாண் துறையில் இறுதி ஆண்டு பயிலும் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரி மாணவர்கள் நந்தகுமார், சரண் கணேஷ், லியோ இன்ஃபான்ட், சத்யபிரகாஷ், கோபிநாத், சரவணன், ராஜகுமரன், அர்ஜுன் பி.வேணு ஆகியோர் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடின் (PRA) கீழ் தேவதானம் கிராமத்தில் செல்வத் தர வகைபாடு, பருவகால நாட்காட்டி போன்றவற்றை வரைபடங்களாக மக்களுக்கு எடுத்துரைத்தனர். இந்நிகழ்வில் கிராம மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் திருமலைச்சாமி, வேளாண் அலுவலர் மாரியப்பன், உதவி வேளாண் அலுவலர் மருதுபாண்டி, ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம.ஜெயந்தி, குழு ஆலோசகர் முனைவர் ச.முதல்வன் தலைமையில் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு நடத்தினர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938